கண்களை கவரும் கொன்றை...

▶ விருதுநகரில் இருந்து அருப்புக்கோட்டை செல்லும் சாலையோரம் பூத்துக் குலுங்கும் கொன்றை மலர்கள் கண்களை கவர்கின்றன.

பட்டாசு வேதிப்பொருள் ஆராய்ச்சி மையம்

கட்டுமான பணி மீண்டும் தொடங்குமா?

சிவகாசி, ஜூன் 10: சிவகாசியில் பூமிபூஜை போட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் பட்டாசு வேதிப்பொருள் ஆராய்ச்சி மையம் பணிகள் தொடங்கப்படாததால் பட்டாசு உற்பத்தியாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி, திருத்தங்கல், வெம்பக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன. பட்டாசு ஆலைகள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 8 லட்சம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். நாட்டில் 90 சதவீத பட்டாசு உற்பத்தி சிவகாசியில் தயாரிக்கப்படுகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்க பசுமை பட்டாசு தயாரிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டது. பட்டாசு தொழிலை மேம்படுத்துவதற்காக ஒன்றிய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க

2 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பு

வேண்டும் என பட்டாசு ஆலை உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதன் பேரில் கடந்த 2022ம் ஆண்டு தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி கழக விஞ்ஞானிகளின் ஆலோசனைக் கூட்டம் சிவகாசியில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை விஞ்ஞானி சாதனா ராயலு, விஞ்ஞானி சரவணன் உள்பட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பட்டாசு ஆலை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். இதில் சிவகாசியில் பட்டாசு ஆலை வேதிப்பொருள் ஆராய்ச்சி மையம் தொடங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சிவகாசி அருகே தெற்குஆனைக்குட்டம் கிராமத்தில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை அமைச்சகம், தேசிய சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையம் மற்றும் டான்பாமா (பட்டாசு மற்றும் கேப்வெடி உற்பத்தியாளர்கள்) சங்கம் சார்பில் ரூ.15 கோடி மதிப்பில் 5 ஏக்கர் நிலபரப்பில் பட்டாசு வேதிப்பொருள் ஆராய்ச்சி மையம் கட்டப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதையடுத்து கடந்த 2023ல் ஜன.10ல் கட்டிடத்திற்கான பூமி பூஜை நடைபெற்றது. பூமிபூஜை போட்டு 3 மாதங்களுக்கு பிறகே பணிகள் தொடங்கியது. 20 சதவீத பணிகள் நடைபெற்ற போது அனைத்தும் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் பணிகள் மீண்டும் தொடங்கப்படாததால் பட்டாசு உற்பத்தியாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பட்டாசு ஆராய்ச்சி மைய கட்டுமானப் பணிகளை உடனடியாக மீண்டும் தொடங்கவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

சிவகாசியில் அமையும் இந்த பட்டாசு வேதிப்பொருள் ஆராய்ச்சி மையத்தில் அனைத்து ஆய்வக வசதிகளும் ஏற்படுத்தப்படும். பசுமை பட்டாசு உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள் ஆராய்ச்சி பணி இங்கு நடைபெறும். பட்டாசு ஆலைகளில் தயாரிக்கப்படும் பட்டாசில் புகை மாசு குறைக்கப்படும். புகை மாசில்லா பட்டாசுகள் தயாரிக்க இந்த ஆராய்ச்சி மையம் பெரிதும் உறுதுணையாக இருக்கும். இந்த ஆராய்ச்சி மையம் பசுமை பட்டாசு உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கு சான்றிதழ் வழங்கும். இதன் மூலம் எதிர்காலத்தில் பசுமை பட்டாசுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்.

உயிரியல் காரணிகள் மூலம்

தென்னையில் நோய் வராமல் தடுக்கலாம்

தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் தகவல்

விருதுநகர், ஜூன் 10: உயிரியல் காரணிகள் மூலம் தென்னை நோய் மேலாண்மை செய்வது குறித்து தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பூலோக கற்பகவிருட்சம் அல்லது மரங்களின் சொர்க்கம் என்றும் பல பெயர்களில் அழைக்கப்படும் தென்னை சாகுபடியில் பல்வேறு காரணங்களால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. அவற்றில் நோய் தாக்குதல் முக்கிய காரணமாக கருதப்படுகிறது. தென்னையில் ஏற்படும் முக்கிய நோய்களான குருத்தழுகல், இலைப்புள்ளி, இலைக்கருகல், அடித்தண்டழுகல், தண்டு சாறுவடிதல், வேர்வாடல் நோய் மற்றும் இலை அழுகல் ஆகும். இன்றைய சூழலில் நோய்களில் இருந்து தென்னையை பாதுகாப்பது என்பது மிக முக்கியமாக கருதப்படுகிறது.

எனவே, உயிரியல் முறையில் பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளை கையாண்டு தென்னையை நோய் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இன்றைய வேளாண்மையில் ரசாயன பூச்சி மற்றும் பூசணக் கொல்லிகளை பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு பூச்சிகள் மற்றும் நோய்க்காரணிகள் எதிர்ப்புச்சக்தி தோன்ற வழிவகுக்கிறது. மேலும், தானியப்பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் நச்சுத்தன்மை தங்கி உயிரினங்களுக்கும் தீங்கு ஏற்படுகிறது. ஆனால், உயிர் எதிர்க்கொல்லிகளை பயன்படுத்துவதால் அத்தகைய சூழ்நிலை சீர்கேடு ஏற்படுவதில்லை.

தென்னை நோய்களை கட்டுப்படுத்த பயிர்களுக்கு நன்மை தரக்கூடிய பாக்டீரியா வகையைச் சார்ந்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி பூசண வகையைச் சேர்ந்த உயிர் எதிர் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும். இதனை பவுடராக தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. இந்த பவுடரை 20 நாள் வரை வைத்து உபயோகப்படுத்தலாம். ஆண்டிற்கு 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு மற்றும் 50 கிலோ மக்கிய சாணஎருவுடன் பேசில்லஸ் சப்டிலிஸ் 200 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி 200 கிராம் கலந்து மரத்திற்கு இட வேண்டும்.

மேலும், இதனை தொழு உரத்துடன் கலந்து பெருக்கம் செய்தும் பயன்படுத்தலாம். ஒவ்வொரு முறை கலக்கும்போதும் ஈரப்பதம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஈரப்பதம் இல்லையென்றால் தண்ணீர் தெளித்து பின்பு கலக்க வேண்டும். இவ்வாறு கலந்த கலவையை 25 நாட்கள் வைப்பதால் உயிர் எதிர்கொல்லிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இக்காரணிகள் நோய்களை கட்டுப்படுத்துவதோடு பிற வளர்ச்சி ஊக்கிகளை சுரப்பதால் பயிர் வளர்ச்சி மற்றும் மகசூல் அதிகரிக்கிறது. இத்தகைய பலன் தரும் உயிர் எதிர்கொல்லிகள் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. விவசாயிகள் இந்த உயிர் எதிர்கொல்லிகளை பெற்று தென்னையை நோய் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாமென தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசு கல்லூரியில் 2ம் கட்ட கலந்தாய்வு

பரமக்குடி, ஜூன் 10: தமிழகம் முழுவதும் உள்ள 183 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை பாடத்திற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கடந்த ஜூன் 3ம் தேதி சிறப்பு ஒதுக்கீடு மாணவர்களுக்கான கலந்தாய்வு நடைபெற்று மாணவர் சேர்க்கை தொடங்கியது.

தொடர்ந்து கடந்த 4ம் தேதி அறிவியல் பாடப்பிரிவுகளுக்கும், 5ம் தேதி வணிகவியல் (கூட்டுறு செயலான்மை) நிர்வாக மேலாண்மை, வரலாறு, பொருளியல் பாடப்பிரிவுகளுக்கும் 6ம் தேதி தமிழ், ஆங்கிலம் ஆகிய பிரிவுகளுக்கு பொது பிரிவினர்களுக்கான கலந்தாய்வு நடைபெற்றது.

இந்நிலையில் பரமக்குடி அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் குமார் கூறுகையில் முதல் கட்ட கலந்தாய்வு 4ம் தேதி நடைபெற்ற நிலையில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்காக வரும் ஜூன் 11ம் தேதி இரண்டாம் கட்ட கலந்தாய்வும், வரும் 13ம் தேதி மூன்றாம் கட்ட கலந்தாய்வு அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நடைபெறுகிறது. ஆகையால், மாணவ,மாணவிகள் கலந்தாய்வு நடைபெறும் நாட்களில், அனைத்து ஆவணங்களுடன் கல்லூரிக்கு வருகை தந்து கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என தெரிவித்துள்ளார்.

நம்மாழ்வார் தரிசனம்

▶ ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னதியில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு நம்மாழ்வார் திருநட்சத்திரம் புறப்பாடு நடைபெற்றது. இதில் சர்வ அலங்காரத்தில் நம்மாழ்வார் காட்சியளித்தார்.

நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயில்

தேரோட்ட திருவிழா கோலாகலம்

ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

▶ ராஜபாளையம் அருகே தேவதானத்தில் தேரோட்ட திருவிழாவில் ராணி ஸ்ரீகுமார் எம்பி, தங்கப்பாண்டியன் எம்எல்ஏ, வாரியத்துணைத் தலைவர் ராசாஅருண்மொழி, நகராட்சி சேர்மன் பவித்ரா ஷியாம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ராஜபாளையம், ஜூன் 10: ராஜபாளையம் தேவதானம் நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயில் தேரோட்ட திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

ராஜபாளையம் தொகுதி தேவதானம் அன்னை தவம் பெற்ற நாயகி உடனுறை நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயில் தேரோட்ட விழா நேற்று நடைபெற்றது. தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன், வாரியத்துணைத் தலைவர் ராசாஅருண்மொழி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், நகராட்சி சேர்மன் பவித்ரா ஷியாம், நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராஜா ஆகியோர் தேரை வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு ராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் ஏற்பாட்டில் தேரோட்டத் திருவிழாவிற்கு வருகைபுரிந்த பக்தர்கள் சுமார் 15000 நபர்களுக்கு புளியோதரை, கேசரி, பிஸ்கெட், தண்ணீர் கேன் அடங்கிய அன்னதான பிரசாதபைகளை வழங்கினர்.

விழாவில் பேரூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், முன்னாள் துணை சேர்மன் துரை கற்பகராஜ், முன்னாள் கவுன்சிலர்கள் ஏசம்மாள், அரிராம்சேட், அனுசுயா கண்ணன், கவுன்சிலர்கள் சுந்தர், ஆறுமுகசுந்தரி, கணேசன், ஆதிதிராவிடர் அணி சேகர், இளைஞரணி பாலசுப்பிரமணியன், அணி அமைப்பாளர்கள் நிர்வாகிகள் மிசாநடராஜன், நாகேஷ்வரன், மாயாவி, சேகர், முருகேசன், லட்சுமணன், வார்டு கிளைச்செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பக்தர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில்

ரூ.46 லட்சம் உண்டியல் காணிக்கை

▶ இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் பெண்கள் ஈடுபட்டனர்.

சாத்தூர், ஜூன் 10: இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் ரூ.46 லட்சம் உண்டியல் காணிக்கை வசூலாகி உள்ளது.

சாத்தூர் அருகே உள்ள இருக்கன்குடி மாரியம்மன் கோயில் தென்தமிழகத்தில் பிரசித்தி பெற்றது. இங்கு மாதந்தோறும் உண்டியல் திறந்து எண்ணப்படுவது வழக்கம். நேற்று 10 நிரந்தர உண்டியல், ஒரு கோசாலை உண்டியல் மற்றும் அன்னதான உண்டியல்கள் திறக்கப்பட்டு, விருதுநகர் மாவட்ட இந்து அறநிலைத்துறை உதவி ஆணையர், இருக்கன்குடி மாரியம்மன் கோயில் உதவி ஆணையாளர் இளங்கோவன், பரம்பரை அறங்காவலர் குழு தலைவர் ராமமூர்த்தி பூசாரி ஆகியோர் முன்னிலையில் கணக்கிடப்பட்டன. இதில் ரூ.45 லட்சத்து 61 ஆயிரத்து 305 ரொக்கம், தங்கம் 166.200 கிராம், வெள்ளி 685.100 கிராம் கிடைத்தது. உண்டியல் எண்ணும் பணியில் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள், கோயில் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: எண்.39, சீயோன் டவர்ஸ், 3வது தளம், கலவாசல் புறவழிச்சாலை, மதுரை - 625016

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(12)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26/06/2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நி.வி.-ல் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விண்ணங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். HL00126100000005011555 செல்வ லட்சுமி ஆர் (கடன்தாரர்) ரவிக்குமார் எஸ் (உப – கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09/12/2024 மொத்த நிலுவை: 09/12/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.1143080/- (ரூபாய் பதினொரு லட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எண்பது மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @ 12.50 % உட்பட.	கையக	விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், திருத்தங்கல் துணைப் பதிவு அலுவலகம், சிவகாசி தாலுகா, கீழதிருத்தங்கல் கிராமம், சர்வே எண்.1360/1 1 ஏக்கர் பரப்பளவில் 31 செண்ட் சொத்து பிரிக்கப்பட்டுள்ளது பல்வேறு வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, எந்த மனை எண்.42 இல் 900 சதுர அடி பரப்பளவில் பின்வரும் எல்லைகளுக்குள் உள்ள சொத்தின் அடி:– வடக்கு: சொத்து தாயம்மாள் மற்றும் பிறருக்குச் சொந்தமானது கிழக்கு: மனை எண்.43 தெற்கு: 15 அடி அகல கிழக்கு–மேற்கு பொதுவான பாதை மேற்கு: 20 அடி அகல வடக்கு–தெற்கு பொதுவான பாதை, கிழக்கு–மேற்கு 25 அடி வடக்கு மற்றும் தெற்கில், வடக்கு–தெற்கில் 36 அடி கிழக்கு மற்றும் மேற்கில்,மொத்தம் 900 சதுர அடி பரப்பளவில் 83.61 சதுர அடிக்கு சமம். அனைத்து வைப்புத்தொகைகள் மற்றும் பொருத்துதல்கள் மற்றும் அனைத்து பிற வசதிகளுடன் கூடிய காலியிடத்தின் மிட்டர் அனைத்து பாதை உரிமைகளுடன். கூறப்பட்ட சொத்து 1360/ 1a1a1a1a1a இல் பட்டா எண். 581 இல் 0.31.20 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் பள்ளப்பட்டி பஞ்சாயத்து மற்றும் சிவகாசி பஞ்சாயத்து யூனியன் எல்லையில் அமைந்துள்ளது.	Rs. 10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்)	Rs. 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)	25/06/2025 Before 5 PM	10,000/-	19/06/2025 (11AM – 4PM)	26/06/2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை
2	கடன் எண். HL00692100000005036557 சீனியம்மாள் பொன்ராம் (கடன்தாரர்) பொன்ராம் ராமன் (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09/12/2024 மொத்த நிலுவை: 09/12/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 2413445/- (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து பதின்மூன்று ஆயிரத்து நானூற்று நாற்பத்தைந்து மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @ 13.50 % உட்பட.	கையக	திண்டுக்கல் பதிவு மாவட்டத்தில், திண்டுக்கல் இணை I பதிவு மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, சீலபாடி கிராமம், மனை எண்.24 இல் S.No.677/2 அளவீடு பகுதி கிழக்கு மேற்கு 18 அடி வடக்குப் பக்கத்தில், தெற்குப் பக்கத்தில் 18 அடி, வடக்கு தெற்கு கிழக்குப் பக்கத்தில் 40 அடி, மேற்குப் பக்கத்தில் 40 அடி மொத்தம் 720 சதுர அடி, கட்டப்பட்ட RCC கட்டிடத்துடன் அதன் எல்லைகள்: நான்கு எல்லைகள் வடக்கு:– பிளாட் எண்.49, தெற்கு:– 7.2 மீட்டர் அகல சாலை, கிழக்கு:– பிளாட் எண். 23, மேற்கு பிளாட் எண்.25	Rs. 18,00,000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்)	Rs. 1,80,000/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	25/06/2025 Before 5 PM	10,000/-	19/06/2025 (11AM – 4PM)	26/06/2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை
3	கடன் எண். HF0126H20100219 சிக்கந்தர் கே (கடன்தாரர்) கமர்தீன் சலீமா பேகம் (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 07/08/2024 மொத்த நிலுவை: 07/08/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 2327013/- (ரூபாய் இருபத்தி மூன்று லட்சத்து இருபத்தி ஏழாயிரத்து பதின்மூன்று மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @ 15.50 % உட்பட.	கையக	மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், அலங்காநல்லூர் துணைப் பதிவாளர், வாடிப்பட்டி தாலுகா, அச்சம்பட்டி கிராமம். பழைய நத்தம் பிரிவு எண்.71 பகுதி, தற்போது மனைவாரி பட்டா எண்.206 இன் படி ரூ.எண்.103/22 அளவு 0.02.09 சதுர அடி. மிட்டர் அல்லது 2250 சதுர அடி., அந்த வீட்டில் 768 சதுர அடி நிலம் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் உள்ளது. குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது விற்பனை பத்திரத்தில் செயல்படுத்தப்பட்டது. எல்லை: வடக்கு:– பழனிகுமார் மற்றும் பெத்தியம்மாளுக்கு சொந்தமான காலி நிலம் கிழக்கு:– தெற்கு–வடக்கு சிமெண்ட் தெரு. தெற்கு:– மாயகிருஷ்ணன் & புனிதா மற்றும் பிச்சைமுத்துவிற்கு சொந்தமான வீடு. மேற்கு: பெரியண்ணன் மற்றும் பிறருக்கு சொந்தமான காலி நிலம்.	Rs. 19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்)	Rs. 1,90,000/- (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்)	25/06/2025 Before 5 PM	10,000/-	19/06/2025 (11AM – 4PM)	26/06/2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண் –68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண். 9948182222 மூலமாகவோ தொடர்புகொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும்.ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்–000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20, R.N.முகர்ஜி சாலை, கொல்கத்தா–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது அட்டவணை வங்கியிலோ **25/06/2025 தேதி** அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை **எண்.1510. 2வது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641018** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com–ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்-2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

தேதி: 10.06.2025, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிட., என்றறியப்பட்டது)

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777 9.30 AM - 6.00 PM